★ புயலுக்கு அச்சாரம் போடுகிறார்களா? ★

Phone No 4502 — Regd. No. M. 5458

விலை அரை அணா — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (6—3—50) ✠ வெளியூர் (7—3—50) [இதழ் 185

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை ஒழித்துக்கட்ட புதிய வழி!

——————(0)——————

சென்னை சர்க்கார் போக்கு சரியல்லவாம்!

——————(0)——————

சட்டத்தைக் காட்டி பயமுறுத்துகிறார் தோழர் கரந்த்

“இந்தியாவின் குடியரசுச் சட்டத்தில் இந்திய மக்கள் அனைவருக்கும் சரி சமத்துவமான உரிமையும் சந்தர்ப்பங்களும் அளிக்கப்பட்டுகின்றன. பிற்போக்கான நிலையில் உள்ள மக்களுக்கென உத்தியோகங்களை ஒதுக்கி வைக்கலாம் என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்கும்போது, இந்த சர்க்கார் மாத்திரம் வேறு விதமாக நடந்து கொள்வானேன்? நம் நாடு போரில் ஈடுபட நேர்ந்தால் போருக்கு ஆள் சேர்ப்பதில் ஒவ்வொரு துறையிலும் 12 ஸ்தானங்களாகப் பிரித்து, வகுப்புவாரியாக ஆள் சேர்க்கப்போகின்றனரா? இந்தப் பிரச்னையை நாங்கள் நீதிமன்றத்துக்குக்கொண்டுபோய் அதன் தீர்ப்புக்காக எதிர்நோக்கிக் கவலைப்படப்போவதில்லை. ஆனால் இவ்விதம் செய்துகொண்டே போவது சட்டவிரோதமானது, நியாயத்துக்குப் புறம்பானது என்று கூற எனக்கு உரிமை உண்டு. என் சொந்த அபிப்பிராயத்தில் சர்க்கார் உத்தியோகத்துக்குப் போவது போன்ற ஒரு பட்டாசமான வேலை வேறு இருக்க முடியாது. ஆகையால நான் கவலைப்படவில்லை. ஆயினும் தவறை எடுத்துச் சொல்வது என் கடமை”

அண்மையில் சட்டசபையில் வரவு-செலவுத் திட்டம் பற்றி நடைபெற்ற விவாதத்தின்போது மேற்கண்டவாறு பேசியிருக்கிறார் தோழர் கரந்த்.

சென்னை சட்ட சபையில் வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை ஒழிப்புப்பணி ஆண்டு தவறாமல் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் எதை மறந்தாலும் ‘நமசிவாய’த்தை மட்டும் ஒரு நாளும் மறக்கமாட்டார்கள். அதுபோலவே, இம்மாகாண ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் சீலர்கள் சிலர், எதைமறந்தாலும் மறப்பார்கள், ஆனால் வகுப்புவாரி பிரதிநிதித்வ சட்டத்தை மட்டும் மறக்க மாட்டார்கள். அதனை ஒழித்துக்கட்டுவது எங்ஙனம் என்பது பற்றி அவர்களுக்கு அல்லும் பகலும் சிந்தனை!

இப்படிப்பட்ட சீலர்களின் பட்டியலில் தோழியர் ருக்மணி லட்சுமிபதியும் ஒருவர். அந்த அம்மையார்தான் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ முறை ஒழிப்புப்படலத்துக்கு ஆரம்பவிழா நடத்தியவர். அந்த அம்மையார் இப்பொழுதும் அது பற்றியே பேசியிருக்கிறார். அம்மையார் பேச்சு ஒருபுறமிருக்கட்டும். தோழர் கரந்தின் வாதத்தைச் சற்று கவனிப்போம்.

மற்றவர்களை விட தோழர் கரந்தின் கண்களைத் தான் அதிகமாக உறுத்திக்கொண்டிருக்கிறது “கம்யூனல் ஜி. ஓ.” “கம்யூனல் ஜி. ஓ.”வை சென்னை அரசியலார் கடைப்பிடிப்பது சட்டவிரோதமான செயலாம்.

இதற்கு அவர் காட்டும் காரணம், இந்தியக் குடியரசுச் சட்டத்தில அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்! பிற்பட்ட வகுப்பினர்க்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவாம்!

ஆம், உண்மைதான்; இந்திய குடியரசுச் சட்டத்தில் இது மட்டுமா உள்ளது! எண்ண, எழுத, பேச இன்னபிற காரியங்களுக்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதாகத்தான் பறை சாற்றப் படுகிறது. ஆனால் அவைகடை முறையி

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க)

“பர்மாவும், சயாமும் ரஷியாவின் அடுத்த இலக்குகளாகலாம்”

‘இந்தியாவுக்கும் ஆபத்து நெருங்குகிறது”

ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் கருத்து

லண்டன், மார்ச். 5—

“உலக ஆதிக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் ரஷியா தனது திட்டப்படி கூடியவிரைவில் பர்மா மீதும், சயாம் மீதும் தனது பலமான தாக்குதலை ஆரம்பிக்கும். கம்யூனிஸ்டுப் படைகள் திபெத்மீது படை யெடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு இந்தியாவை ஒரு பொதுப் போர் முகாமாகக் கொள்ளவும் திட்டமிட்டிருக்கின்றனர் இந்தியவுக்கும்வரவர ஆபத்து அதிகரிக்கிறது.”

என்று ஐரோப்பிய அரசியல் வல்லுனர் குழு கூறுகிறது. அக்குழு மேலும்கூறுவதாவது:—

ரஷியா தனது ஆக்ரமிப்புத் திட்டத்தை மேலும் விரிவாக்கி துரிதமாகவேலைசெய்ய ஆரம்பித்துள்ளது.

தென் ஆசியாவின் மற்றப் பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியில் ரஷியா வெற்றி பெற்ருல், ஏறக்குறைய உலகில் பாதி ரஷிய ஆதிக்கத்தின் கீழ் வந்துவிடக்கூடும்.

‘விடுதலைப்படை” என்ற பெயரில் ஒரு படையைநிறுவி, கம்யூனிஸ்டு சீனக் கொரிலாப படை பலத்தையும் இப்படையுடன் சேர்த்து, அவற்றின் உதவிகொண்டு இந்தோ-சீனு, சயாம், பர்மா முதலிய இடங்களைப் போர் முகாமகளாக்க ரஷியா திட்டமிட்டிருக்கிறது.

இந்தோ—சீனுவில் கம்யூனிஸ்டுகளின் கை ஓங்குமானுல் அதனை அடுத்துள்ள நாடுகளிலும் அதிவிரைவில கம்யூனிசம் பரவக்கூடும்.

———

ரங்கூன், மார்ச். 5—

பர்மா ஜப்பானியர் வசம் இருந்த போது மந்திரியாக இருந்த தாகின் டன் ஓக் என்பவர் வியாபார நிமித்தமாக பிரிட்டன், அமெரிக்கா ஜபபான் செல்ல பாஸ் போர்ட் கோரியிருந்தார். பர்மிய சர்க்கார் பாஸ் போர்ட் அளிக்க மறுத்துவிட்டனர்.

—ஜோப

ஆஸ்திரேலியாவில் பெட்ரோல் தாராளமாவே செலவாகின்றன

சிட்னி, மார்ச். 5—

ஆஸ்திரேலியாவில் பெட்ரோல் ரேஷன் எடுபட்டதின் விளைவாக, ஆஸ்திரேலியர்கள் பெட்ரோலை மிகவும் குறைவாகவே உபயோகிக்கின்றனர் என்று சர்க்கார் புள்ளி விபரங்கள் அறிவிக்கின்றன.

(ஜோப்)

தென் ரொடீஷிய சர்க்கார் ஏமாந்தது!

ஸாலிஸ்பரி(ரொடீஷியா), மார்ச்.5—

வருமானத்தை அதிகரிக்க தென் ரொடீஷிய சர்க்கார் புது வரி ஒன்றை சிகரெட்டுகளுக்கு விதித்தது. இந்தச் சிகரெட்டுகளை உபயோகிக்கும் ஐரோப்பியர்கள், இதன் பேரில் சுதேசிகள் உபயோகிக்கும் மலிவான சிகரெட்டைபிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதன் பலனாக வருமானத்திற்குப் பதில் நஷ்டம் ஏற்படும் நிலைமைஏற்பட்டுவிட்டது.

பாவ்டே சர்க்காரை அங்கீகரிக்க ஜார்டன் முடிவு

பிரெஞ்சு யூனியனுக்குட்பட்ட சுதந்திரநாடு என்று பாவ்டேயின் நிர்வாகத்திலுள்ள வியட்நாமை அங்கீகரிக்க ஜார்டன் சர்க்கார் முடிவு செய்து விட்டது

வட்டமேஜை மாநாட்டாலும் வாட்டம் தீராது!

——————(0)——————

தெ. ஆ. இந்தியர் பிரச்னை தீர வழியில்லை

லண்டன், மார்ச். 3—

தென் ஆப்பிரிக்க இந்தியர் பிரச்னை விஷயமாக ஆலோசிக்கக் கூடும் வட்டமேஜை மாநாட்டின் மூலம் இப்பிரச்னை முழுவதும் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை என்று, வெஸ்டான் மெயிலின் பிரிடோரியா நிருபர் எழுதுகிறார்.

எவ்வளவோ முட்டுக்கட்டைகளில் ஒரு சிறிது அளவுக்குத்தான் மூன்று நாடுகளாலும் தீர்க்கப்பட்டிருக்கிறதென்றும், நீண்டகால ஊறிப்போன பிரச்னையானதால் ஏதாவது உடன்பாடு ஏற்பட்டாலும் அது தற்காலிகப் பலனை அளிக்கக்கூடியதாகவேதான் இருக்கும் என்றும் அவர் கூறுகிறார்.

1837-லேயே ஒரு வழியாக இப்பிரச்னையைத் தீர்க்க காலம் சென்ற மகாகனம் தோழர் சீனிவாச சாஸ்திரி முயன்றார் என்றும், ஆனால் அவர் செய்த முயற்சிகள் இப்பொழுது மறக்கப்பட்டு விட்டனவென்றும், அவர் செய்த நல்ல காரியங்கள் மலான் சர்க்காரின் நிறத்திமிர் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதென்றும் இவர் கூறுகிறார். ....ரூனோப்

கோள்களுக்கிடையே போக்குவரத்து

இன்னும் 50 ஆண்டுகளில் சாத்யமாகலாம்

பிரிட்டிஷ் வானநூற்புலவர் கருத்து

லண்டன், மார்ச். 4—

சந்திரமண்டலத்தை எட்டிப் பிடிக்க விடப்படும் ராக்கெட் 1960க்குள் சந்திரனை சமீபித்துவிடும் என்றும், கிரகங்களுக்குப் போய்வரும் போக்குவரத்துச் சாதனம் ஏற்பட குறைந்தது 50 ஆண்டுகளாவது பிடிக்கும் என்று பிரபல பிரிட்டிஷ் வானசாஸ்திரி எ. ஸி. கிளார்க் கூறினர்.

சூரிய உஷ்ணம் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதென்பது உண்மையாக இருப்பின் சமுத்திரங்கள் பொங்க ஆரம்பித்துவிடும் என்றும், இதர கிரகங்கள் மீது படையெடுக்க வேண்டிவரும் என்றும் அவர் கூறுகிறார்.

அணுசக்திகளின் ஆராய்ச்சி விளைவாக 258 நாட்களில் இதர எரி பொருள்களை உபயோகித்து, செவ்வாய் கிரகத்திற்குச் செல்லக்கூடிய பிரயாணம் அணுசக்தி விமானக்கப்பல் மூலம் சில வாரங்களில் செய்ய முடியும் நிலைமை ஏற்படலாம்.

இதர கிரகங்களில் வேறு ஆட்கள் வசிக்கும் பட்சத்தில் அவர்கள் பூவுலக மனிதர்களை விட பலமுள்ளவர்களாகவே இருக்கக்கூடும்.

செஞ்சீனாவுக்காக நிதி திரட்டப்படுகிறது

ஹாங்காங்கில் ‘வெற்றிப் பத்திரங்கள்’ விற்கப்படுகின்றன

ஹாங்ஹாங், மார்ச். 5—

கம்யூனிஸ்டு சீனுவின் நிர்வாகத்தை நடத்துவதற்காக, செஞ்சீனு சர்க்கார் வெளியிட்டுள்ள ‘வெற்றிப்பத்திரங்கள்’ ஹாங்ஹாங்கில் விற்கப்பட்டு வருகின்றன. இதுவரை 4 00,000 யூனிட் ‘பாண்டுகள்’ விற்கப்பட்டிருக்கின்றனவாம். இதன் மூலம் 2,10,00,000 ஹாங்ஹாங் டாலர்கள் செஞ்சீனு சர்க்காருக்குக் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

பர்மாவிலிருந்து அரிசி ஏற்றுமதி

ரங்கூன், மார்ச் 5—

இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து பிப்ரவரி 22-உ வரை பர்மா 360927 டன் அரிசியை அயல்நாடுகளுக்கு விற்றிருக்கிறது.

இதில் ஜப்பான் மட்டும் 194000-டன் அரிசியை வாங்கியிருக்கிறது. இலங்கை 90,000 டன், இந்தோனேஷியா 12,250 டன், கோவா 11687 டன், கிழக்கு ஆப்பிரிக்காவும் மாருதியஸ்ஸம் 9000 டன் வாங்கியிருக்கின்றன.

மாலை மணி

சென்னை 6—3—50 திங்கட்கிழமை

குறிஞ்சிப்பாடி மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி, செயலாற்ற முற்பட்டு, ஏறத் தாழ ஆறு திங்கள் ஆகின்றன. இந்த மிகக் குறுகிய காலத்தில் அது தழைத்தோங்கியிருக்கிற விதமும்,—எழிலுடன் காட்சியளிக்கும் பாங்கும!— அது கொண்டிருக்கும் ஏற்றமும் —மக்கள் அதன்பால் காட்டும் அன்பும், ஆதரவும் முன்னேற்றக் கழகத் தோழர்களனைவருக்கும் புதுமுறுக்கும், புது உற்சாகமும் கொடுத்து வருகின்றன என்பதை நன்கு அறிகிறோம்.

உண்மை உழைப்புக்கு ஊறு நேரிடாது-தூய்மை உள்ளத்திற்குக் கேடுவராது-ஆக்கமும் ஊக்கமும் இருந்தே தீரும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் தன் வளர்ச்சியின் மூலம் நாட்டினருக்கு அறிவுறுத்தி வருகிறது.

உதாசீனம் செய்யப்பட்ட உண்மை உழைப்பாளிகள்—தள்ளப்பட்ட தூய நெஞ்சமுடையோர்—வஞ்சிக்கப்பட்ட வாலிப வீரர்கள்-பொறுமைக்குப் பலியாகிப் புதையுண்டு கிடந்த மணிகள்—மாணிக்கங்கள்—கீழ்த்தர செயல்களில் இறங்கமறுத்து, பெருநோக்குடன் வாழ விரும்பிய சீயங்கள்—கொள்கையே பெரிது என்று எண்ணி, அதனைக் காப்பதே கடன் என்று துணிவு கொண்டு, பணியாற்றி வந்தச் சீலர்கள்-கொள்கையைப் புறக்கணித்தவர்களைக் கொள்கைக்காகப் புறக்கணிப்போம் என்ற வற்ற உறுதியோடு தொண்டாற்றிய தீரர்கள் ஆகிய இத்தன்மையோர் ஒன்று கூடியுள்ள குற்றமற்றக் கூடாரமாக விளங்குகிறது, திராவிட முன்னேற்றககழகம். பொறுக்கி எடுத்த ஒளிவிடும் மாணிக்கங்களால் கட்டப்பட்ட, வைர மணிக்கோட்டையாக விளங்குகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

ஏற்பட்டிருக்கும் கிளைகள்-போட்டிருக்கும் கூட்டங்கள்-ஆற்றியிருக்கும் செயல்கள். இவற்றிற்கு மக்கள் காட்டும் ஆதரவு இவையெல்லாம் முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் செல்வாக்கின் அறிகுறிகளாகும், நீதி நெஞ்சமுடையோர், நேர்மையில் நாட்டமுடையோர் அனைவரும் கழகத்தின் இரு வண்ணக்கொடியின நிழலிலே கூடுகிறார்கள்—வாலிப உலகம் வரவேற்பளிக்கிறது.—படித்தவர்கள் பண்புடன் போற்றுகிறார்கள் — இவையெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகளாகும்!

திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களாகப் பலர் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளார்கள், பதிவு செய்து கொள்ள வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்; அவர்கள் பதிவு செய்து கொள்வதற்கான வசதி களைக் கிளைக் கழகச் செயலாளர்கள் புரிந்து வருகிறார்கள்—செயலாளர்கள் இன்னும் கொஞ்சம் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கினால் எண்ணற்றவர்கள் சேருவார்கள் என்பதில் ஐயமில்லை.

மாநில மாநாடு கூடுவதற்கு முன் மாவட்டந்தோறும் மாநாடு கூடுவது என்று பொதுக்குழுவினர் தீர்மானித்த தீர்மானப்படி இதுவரை மூன்று மாவட்ட மாநாடுகள் நடைபெற்று விட்டன. இப்பொழுது நான்காவது மாநாடாக, தென்ஆற்காடு மாவட்டத்தின் முதல் மாநாடு 12-3 50-ம் நாள் ஞாயிறன்று குறிஞ்சிப்பாடியில் நடைபெறுகிறது.

தென்ஆர்க்காடு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உணர்ச்சியுடன் தொண்டாற்றும் இளைஞர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். பிரசாரம் மிகக் குறைவாக நடைபெறும் அம் மாவட்டத்தில், மாநாடு கூட்டும் அளவுக்கு, ஆர்வமுள்ள தொண்டர்கள் முனைந்திருப்பது, போற்றிப் புகழ்வதற்குரியதாகும் — அச்செயல் நமக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது

உணர்ச்சி கொண்ட இளைஞர்களையும்—மாநாடு நடைபெறுவதற்கான எல்லா வசதிகளையும், வளங்களையும் ஒருங்கே பெற்று விளங்கும் பேரூரான **குறிஞ்சிப்பாடி**யைத் தேர்ந்தெடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

உலகப் புலவர் பெருந்தகையர்களின் முதல் வரிசையில் முன்னவராக வைத்து எண்ணப்படத்தக்கவரும், பேரறிவாளரும், இந்நாட்டின் பெரியாருமான **திருவள்ளுவர்** பெயர் பந்தலுக்கு அமைந்திருப்பது, மாநாட்டிற்குத் தனித்ததோர் சிறப்பைத் தருவதாகும்!

மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் இரா. நெடுஞ்செழியனைப் பற்றிக் கூற வேண்டியதில்லை-மக்கள் நன்கு அறிவர்.

மாநாட்டின் துவக்குபவராகத் தோழர் பூ கணேசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்—பள்ளிப் பருவ காலத்திலிருந்து கழகக் கொள்கைக்காகப் பாடுபட்டு வரும் இளைஞராவார். அவர் சிறந்த எழுத்தாளர்—பேச்சாளர். இளைஞர் உலகத்திற்கு அவர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு ஆவார்.

வரவேற்புக் குழுத்தலைவர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் இந்தி எதிர்ப்பில் சிறைசென்று, கழகத்துக்குத் தொண்டாற்றுவதை ஒரு பெருங்களிப்பாகவும் - கடமையாகவும் கருதுபவர். மாநாட்டின் செயலாளர்களும் அத்தகு

ஆர்வமுடையவர்களே!

திராவிட முன்னேற்றக்கழகம் தோன்றுவதற்கு முன்பே பலமாநாடுகளிலும் பிரசார நாடகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த 'சந்திரமோகன்' நாடகம், குறிஞ்சிப்பாடி மாநாட்டிலும் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

இத்துணைச் சிறப்புகளும் ஒருங்கே பொருந்த நடைபெறும், குறிஞ்சிப்பாடிமாநாடு வெற்றிக்களிப்புடன் முடிவுறும் என்பதில் ஐயமில்லை.

கழகப் பொதுச்செயலாளரும், பல அரிய சொற்பொழிவாளர்களும் பங்கெடுத்துக் கொண்டு நாட்டின் அரசியல்-பொருளாதார — சமுதாயப் பிரச்சினைகளுக்கு ஏற்ற விளக்கந்தந்து, கழகத்தின் வளர்ச்சியை மேலும் ஒருபடிக்கு உயர்த்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

நாட்டிற்கு நல்ல திட்டம் வகுக்க, குறிஞ்சிப்பாடி மாநாட்டில், குறிப்பாகத் தென் ஆற்காடு மாவட்ட மக்களும் பொதுவாக ஏனையோரும் பங்குகொள்வார்களாக!

பாவ்டே சர்க்காரை பர்மா அங்கீகரிக்கவில்லை

ரங்கூன், மார்ச். 5—

பாவ்டே சர்க்காரை பர்மா அங்கீகரிக்குமா என்ற கேள்விக்கு பர்மிய அயல்நாட்டு மந்திரி ஹோ/லூசான் ஹ்லோ பதிலளிக்கையில், பாவ்டே சர்க்காரை அங்கீகரிப்பதா; ஹோசிமின் சர்க்காரை அங்கீகரிப்பதா என்ற விஷயமாக பர்மிய சர்க்கார் இன்னும் எவ்வித முடிவையும் செய்யவில்லை என்றும், இதுவரை பர்மா எவ்விதத்திலும் தன்னை உட்படுத்திக்கொள்ளவில்லை என்றும் கூறினர்.

எரிட்ரியா விவகாரம்

லண்டன், மார்ச். 5—

எரிட்ரியாவில் ஐ. நா. கமிஷன் தன் வேலையை ஆரம்பித்துள்ள இச்சமயத்தில் அங்குள்ள இருள் தவ ஆதரவு பெற்ற யூனியனிஸ்டு கட்சியும், புத மேற்கு முஸ்லிம் லீகும் நாளுக்குநாள் பலமடைந்து வருகிறது. இது நாடுபினாலாயும் திருப்தி செய்வது என்றால் எரிட்ரியாவைப் பிளப்பது தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

எதியோபிய மன்னர் ஹெய்லி செலாஸி எரிட்ரியா தன் நாட்டுடன் சேரும் பட்சத்தில், சுயாட்சி உரிமை அளிப்பதாகக் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

இதாலியர்கள் ஆதரவுள்ள கட்சிகளின் பலம் குறைந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

சீனர்கள் புத்தாண்டு விழா நடத்தும் முறை

சிங்கப்பூர், மார்ச். 5—

புது ஆண்டுக் கொண்டாட்டம் சீனர்களுக்கு மாபெரும் பண்டிகை. அன்று ஆண்கள் புத்தாடை உடுத்துவர். பெண்கள் தம்மிடமுள்ள வைர நகைகளை எல்லாம் அணிந்து கொள்வது வழக்கமாம். சிங்கப்பூரிலுள்ள சீனர்கள் தாங்கள் அடகு வைத்த நகைகளை எல்லாம் புது ஆண்டு பிறப்பதற்கு முதல் நாள் மீட்டுக்கொண்டுபோனார்கள். புது ஆண்டும் ஆகிவிட்டபடியால், அவை எல்லாம் மீண்டும் லேவாதேவி கடைகளுக்கு அடகுக்கு வந்துவிட்டன! —ருனேரர்

ஹைபா, மார்ச். 5—

ஹைபாவுக்கும் ஜெருசலத்திற்கு மிடையே ரயில்வே சர்வீஸ் ஆரம்பமாகிவிட்டது.

'மிரட்டும்' போரினுல் ஏற்படும் செலவு

லண்டன், மார்ச். 5—

மிரட்டும் போரினுல் நேச தேசங்களுக்கும் ரஷ்யாவுக்கும் எவ்வளவு செலவாகியிருக்கிறதென்பதைப் பற்றி பிரிட்டிஷ் நிதி சம்பந்தமான வாரப் பத்திரிகை 'ஸ்டேடிஸ்ட்' சுவாரஸ்யமான புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் மேற்கு வல்லரசுகள் 1800 கோடி டாலர் முதல் 2000 கோடி டாலர் வரை இதற்காக செலவிட்டிருக்கிறதாம்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் மட்டும் 1350 கோடி டாலர் செலவிட்டிருப்பதாகவும் பிரான்ஸ் பங்கு 100 கோடி டாலர் என்றும் கூறப்படுகிறது.

சோவியத் யூனியன் பட்ஜெட்டில் பாதுகாப்பு இனத்திற்காக 1500 கோடி டாலர் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பட்ஜெட்டில் கணக்கு காட்டாமல் இன்னும் எவ்வளவு செலவிடப்படுகிறதோ அது மர்மமாக இருக்கிறது.

பர்மாவுக்கு கடன் உதவி

லண்டன், மார்ச். 5—

பர்மாவுக்கு 60 லக்ஷம் கடன் கொடுக்க, காமன்வெல்த் முடிவு செய்தது தனிப்பது சமீபகாலசமயத்தில் உதவுவதாகும் என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

சென்ற 6 மாதங்களாக பர்மாவில் அமைதி நிலவி வருவதால் இக்கடன் தொகை பர்மாவின் நிலைமை பெரிதும் சீர்பட செலவழிக்கப்படும் என்று தெரிகிறது.

பிரிட்டன்தான் அதிகத் தொகையை அளிக்கிறதென்றும் அதற்கடுத்தபடியாக இந்தியா 16 லக்ஷம் ஸ்டர்லிங்கை அளிக்கிறதென்றும், பாகிஸ்தான், ஆஸ்திரேலியா தலா 5 லக்ஷம் ஸ்டர்லிங்கும் இலங்கை 2½ லக்ஷம் ஸ்டர்லிங்கும் கடன்கொடுக்க ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இவை தக்கபடி செலவிடப்பட்டால் பர்மாவின் பொருளாதார நிலைமை உயருவதுடன் அங்கு கம்யூனிஸ்ட் ஆதிக்கம் தலைகாட்டா வொட்டாதபடி செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

இதாலியில் கலப்பிரியா மாகாணத்தில் கிஸான் இயக்கம்

சிறு நிலங்களும் கைப்பற்றப்படுகின்றன

ரோம், மார்ச். 5—

இதுவரை தனிப்பட்டவர்களிடமுள்ளவர்களின் ஏராளமான நிலங்களைக் கைப்பற்றிய கலாப்பிரியா மாகாணத்தின் கிஸான்கள் இப்பொழுது சிறு நிலங்களையும், பழத் தோட்டங்களையும் கூட கைப்பற்ற ஆரம்பித்திருப்பதால், மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஒரு ஜில்லாவில் இதைத் தடுக்க ஆயுதம் தரித்த போலீசார் வரவழைக்கப்பட்டனர்

கி. பாகிஸ்தானில் மதுவிலக்கு

ஏப்ரல் 12 முதல் அமுல்

டாக்கா, மார்ச். 4—

கிழக்குப் பாகிஸ்தானின் பூரண மதுவிலக்கு ஏப்ரல் 12 முதல் அமுலுக்கு வரவிருக்கிறது. அன்று முதல் சுமார் 276 கள்ளுக்கடைகளும் மதுபானக்கடைகளும் மூடப்படவிருக்கும்.

பொதுமக்களின் விருப்பத்திற்கிணங்கியே இம்மதுவிலக்கு கொண்டுவரப்படுகிறது. இதனால் ரூ. 65,00000 வருமானம் ஒரு வருஷத்தில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வைத்தியர்களால் அனுமதிக்கப்பட்டவரின் மதஆசாரத்திற்காகக் குடிப்பவர், முஸ்லீமல்லாத அயல் நாட்டினர் இவர்களுக்குக் குடிக்க பர்மிட் அளிக்கப்படும்.

இந்தோனேஷ்யா நாணய மதிப்பு குறைக்கப்படும்

இந்தோனேஷ்யாவின் நாணயமான கில்டரின் மதிப்பு குறைக்கப்படும் என்பது நிச்சயமாகத் தெரிய வருகிறது.

நாணய மதிப்பைக் குறைத்தாக வேண்டிய அவசிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக ஆம்ஸ்டர்டாம் பத்திரிகைகள் கூறுகின்றன.

இரண்டடுக்கு விமானம்!

பிரிட்டனுக்கும் கனடாவுக்கு மிடையே ஏப்ரல் முதல்கொண்டு இரண்டடுக்குள்ள விமானத்தைவிட பி. ஓ. ஏ. ஸி. கம்பெனி முடிவு செய்திருக்கிறது. இதில் 60 பிரயாணிகள் மிக சௌகரியமாகப் பிரயாணம் செய்யலாம். —ருனேரர்

சிரியாவுக்கெதிரே சதி

டமாஸ்கஸ், மார்ச் 4—

சிரிய சர்க்காருக்கு எதிராக மாஜி மந்திரி மைத்ரே அப்துல் எம் அஸ்மாவும் தேசியக் கட்சியின் மாஜி தலைவரான எல்அஸ்மாவும் சேர்ந்து சதி செய்ததாகவும் அவர்கள் இப்பொழுது லெபனனில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்விருவரையும் பிரஷ்டம் செய்வதற்கு இராணுவ விசாரணை ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

யூதர்களுடன் நேர்முகப்பேச்சு கிடையாது

டமாஸ்கஸ், மார்ச். 4—

பாலஸ்தீன பிரச்னை விஷயமாக யூதர்களுடன் நேரிடையாக பேச்சு வார்த்தை நடத்த முடியாது என்பதை சிரியா சர்க்கார் ஜினிவாவிலுள்ள ஐ நா கமிஷனுக்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவித்து விட்டது.

ஐ. நா. பொது அசெம்பிளியில் பாலஸ்தீனப் பிரச்னையை மீண்டும் எழுப்ப அரபு நாடுகளின் ஆதரவு திரட்டப்படுகிறது.

பைஸான்ஷியன் காலத்துக் கல்லறை

அம்மான், மார்ச். 4—

நபுலஸ் அருகில் ஜெருசலத்திலுள்ள புதைபொருள் இலாகாவினரால் பைஸான்ஷியன் காலத்தைச் சேர்ந்த கல்லறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கல்லறை 5 வது நூற்றாண்டைச் சேர்ந்ததென்றும், ஒரே கல்லில் செதுக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. அதனுள் எலும்புகள், வெள்ளி நகைகள், மண் விளக்குகள் இவைகள் அங்கு காணப்பட்டனவாம். இவை ஜெருசலத்திலுள்ள மியூஸியத்தில் வைக்கப்படும்.

பிரிட்டனில் அயல்நாட்டு மாணவர்கள்

லண்டன், மார்ச். 4—

யுத்தத்திற்கு முன் ஒரு வருடத்தில் 3000 மாணவர்கள் அயல்நாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு வந்து கொண்டிருந்தார்கள். இவ்வருஷம் இம் மாணவர்களின் தொகை 8000க்கு மேற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. இவர்களில் பாதி பேர் காலனிநாடுகளிலிருந்து வருகிறவர்கள்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

7 - 3 - 50

அங்கலக்குறிச்சி :— சி. பி. சிற்றரசு, பி. என். இராமானுசம், எம். எஸ். கனகராசன்

உட்கோட்டை :— என். வி. நடராசன், எஸ். கே. சாமி, ஜி. நாராயணசாமி, கே. என். இராமச்சந்திரன்.

8 - 3 - 50

உடுமலைப்பேட்டை :— சி. பி. சிற்றரசு.

பழூர் :— என். வி. நடராசன்.

9 - 3 - 50

தேவனூர்புதூர் :— சி. பி. சிற்றரசு,

சங்கரநயினார் கோயில் :— எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், எஸ். கலிங்கன், டி. ஆர். சுப்பிரமணியம், இரத்தினம்.

கல்கத்தா மெயில் கவிழ்ந்ததின் விளைவு!

6 பேர் மரணம் 85 பேருக்குக் காயம்

சென்னை, மார்ச். 4—

சென்னையிலிருந்து நேத்திரவு புறப்பட்டுச்சென்ற கல்கத்தா மெயில் வண்டி, சென்னையிலிருந்து 48 மைல் தூரத்திலுள்ள குமுடி பேட்டை அருகே, இரவு 11 மணிக்குக் கவிழ்ந்துபோய்விட்டது.

இரண்டு பெண்கள் உள்பட 6 பேர் மாண்டனர் என்றும், 85 பேருக்குக் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. சிறிது காயம் பட்டவர்களில் சென்னை மேல் சபைத்தலைவர் தோழர் இராமகிருஷ்ணா ஐயரும் ஒருவராவர்.

இவ்விபத்திற்குக் காரணம் என்ன என்பது பற்றி விசாரணை நடத்துமாறு உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மேற்படி வண்டியில் பிரயாணம் செய்த தோழர் சாமா வெங்கட்ராவ் உயிர் தப்பினார். அவருக்குக் காயமொன்றும் ஏற்படவில்லை. முன் நான்கு வண்டிகளும், எஞ்சினும் புரண்டு விழுந்துவிட்டன.

இறந்தவர்களின் விவரம்:—டாக்டர் ரத்னம்மாஜுவந்தி (வெண்மெடிகல் ஆபீசர், சென்னை நகரசபை) தோழியர் ஆம்ஸ்டெடல், தாமஸ். (சென்னை முஸ்லீம் பள்ளி ஆசிரியை.)

தோழர் வி. சஞ்சீவிராவ், கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட் சென்னை.)

தோழர் பலராம சோமையா (மிராசுதார், நாடகள்ளி) தோழர் சர்வேஸ்வரராவ். (ஸ்வஸ்திக் ப்ரொடக்ஷன் உரிமையாளர்)

தோழர் போட்டு கமேஸ்வராவ் (அட்வகேட் மைலாப்பூர்) விபத்துக்குள்ளானவர்கள் அனைவரும் சென்னையிலிருந்து சென்ற இரயில் மோட்டாரின் மூலம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டனர்.

டிரைவர், பயர்மேன், மற்றச் சிப்பந்திகளும் தப்பிவிட்டனர். பயர்மேனுக்கு மட்டும் சிறிது காயம்.

சென்னை மந்திரிகள் தோழர் எம். பக்தவத்சலமும்; தோழர் சீதாராமரெட்டியும் மேற்படி ஸ்தலத்திற்கு விரைந்திருக்கின்றனர். இவ்விபத்து பற்றி சென்னை சர்க்கார் அதிகாரப் பூர்வமான அறிக்கையும் விடுத்திருக்கிறது.

மாஜி காதலனைக் கொன்றமாது!

புது காதலன் உடந்தையாம்

பாரிஸ், மார்ச். 4—

சாக்லெட் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யும் 34 வயதுள்ள சேரிலூயி லெர்வோயி என்பவள் 50 வயதுள்ள தன் முன்னாள் காதலனை ரம்பத்தால் அறுத்து, கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறாள்.

இவளுடைய புது காதலன் 27-வயதான ரேமாண்டிகாக் இதில் உடந்தையாக இருந்தானாம். முன்னாள் காதலனை கு வயதாகிவிட்டது அவர் மறையவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை நானும் ரேமாண்டும் முடிவுசெய்தோம். அதன்படி செய்தோம் என்று அந்த மாது கூறினாளாம். —ஜூனைப்

குத்துண்ட நிலைமையிலும் குடிக்கச் சென்றவர்!

பாரிஸ், மார்ச். 4—

முதுகில் புதைக்கப்பட்ட கத்தியுடன் ரத்தம் ஒழுக டேனிசெல் என்பவர் தெரு முழுவதும் நடந்து மதுக் கடைக்குச் சென்று குடித்தபின் 'என் மைத்துனன் என்னைக் குத்தினான்' என்று சொன்னாராம். இவர் உடனே ஆம்புலன்ஸில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இவர் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. —ஜூனைப்

உலக சோதனை கௌன்ஸில்

நியூயார்க், மார்ச். 4—

சர்வதேச சோதனைக் கௌன்ஸில் கூட்டம் மார்ச் 13-ந் தேதி கூடவிருக்கிறது. ஜெர்மனியும் ஜப்பானும் எவ்வளவு சோதனை, என்ன நிபந்தனையில் வாங்க இனி மதிக்கலாம் என்பது பற்றி அதில் ஆலோசித்து முடிவுசெய்யப்படும்.

பாவ்டே சர்க்காரை ஸ்பெயின் அங்கீகரித்தது

மாட்ரிட், மார்ச். 5—

பாவ்டே சர்க்காரை ஸ்பெயின் அங்கீகரித்துவிட்டது இதன் மூலம் பிரெஞ்சு சர்க்காருடன் உறவைப் பலப்படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணம் ஸ்பெயினுக்கு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

பிரான்ஸிலும், ஸ்பெயினிலும் தங்கள் கைவரிசைகளை அதிகரிக்கும்படி கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்துள்ள மாஸ்கோ உத்தரவு வெளியானதின் மூலம் பிரெஞ்சு, ஸ்பெயின் போலீஸ்களுக்கிடையே ஒத்துழைப்பு அதிகரித்திருக்கிறது.

இனி நடப்பவை

பம்பாய்—நகர தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம் 9-3-50 இரவு 9-30 மணிக்கு, கொலாபா கஃப் பேஜ் ரோடு, அத்தர் அவுஸ் கழக அறையில் நடைபெறும். உறுப்பினர்களெல்லாம் வருவதோடு, நிதிக்கு விருந்த தோழர்கள் வருமான பணத்தை உடனுக்குடன் நிரவலாக வாக்களித்த தோழர்கள் தங்கள் நன்கொடையும் தவறாது அவருக்கு சேருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

சங்கரநயினார் கோயில்:—இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், 9—3—50 வியாழன் இரவு 8 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் தோழர்கள் இரத்தினம், இரா. சு. தங்கப்பழம், எஸ். கலிங்கன், டி. ஆர். சுப்பிரமணியம் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

உட்கோட்டை:—இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் துவக்கவிழா, 7—3—50 செவ்வாய் மாலை 4 மணிக்கு தோழர் ஜி. நாராயணசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், நடத்தை எஸ். கே. சாமி, கே. என். இராமச்சந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

நாகை:—நாகப்பட்டினம் தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம், 7—3—50 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு நடைபெறும். உறுப்பினர்களெல்லாம் தவறாது வருவதோடு உறுப்பினர் சேர்க்கும் புத்தகங்களை பெற்றுச்சென்றவர்களும் தவறாது புத்தகங்களைக் கொண்டு வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

திருவையாறு:—இவ்வூர் அரசர் கல்லூரியின் 22 வது ஆண்டுவிழா, 7—3—50 செவ்வாய் மாலை 5 மணிக்கு தஞ்சை மாவட்டக் கலெக்டர் தோழர் தி. க. சக்கரவடிவேல் பி. ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் எம். ஏ. சொற்பொழிவாற்றுவார். இரா. இராஜேந்திரன் என்னும் நாடகம் நடைபெறும்.

* * *

சேலம்:—தோழர் மே. சா. சுந்தரராஜூ (அறநாக)—தோழியர் விஜயம்மாள் ஆகியோர் திருமணம் 8—3—50 திங்கள் காலை 7-30 மணிக்கு, சேலம்குகை, லைன்ரோடு ஓடக்காரத்தெரு, 20/40 என்னுள்ள இல்லத்தில் நடைபெறும்.

வாஷிங்டன் மீது குண்டு விழுந்தால் ...?

நியூயார்க், மார்ச். 3—

வாஷிங்டனுக்குப் பதிலாக மற்றொரு சர்க்கார் நடத்த கூடிய இடத்தைத் தேர்ந்தெடுக்க, உயர்தர அதிகாரிகள் கொண்ட ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும் என்று பு. எஸ். சார்பிரஸ் மெம்பர் வெளியிட்ட யோசனையிலிருந்து, வாஷிங்டன் மீது குண்டு விழுந்தால் சர்க்காரை வேறு இடத்திற்கு மாற்ற யு. எஸ். சர்க்கார் ஒரு இரகசியத்திட்டம் போட்டிருக்கிறது.

வாஷிங்டன் மீது குண்டு விழுந்தால் எந்த இலாகாக்கள் வெளியேற்றப்பட வேண்டும், எது வாஷிங்டனிலேயே இருக்க வேண்டும் என்பதெல்லாம்கூட யோசித்து முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

தென்னாப்பிரிக்காவுக்கு சணல் கோணிப்பைகள்

ஜோஹனஸ்பர்க், மார்ச். 5—

இதுவரை சணல் கோணிப்பைகள் கிடைக்காமல் தவித்துவந்த தென்னாப்பிரிக்காவுக்கு அவை இப்பொழுது தாராளமாகக் கிடைக்க ஆரம்பித்துவிட்டதாம். மார்ச் 12-ந் தேதி முதல் சணல் பைகளை உணவுப்பொருள்கள் ஏற்றுமதிக்கு உபயோகிக்க சணல் கண்ட்ரோலர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

தென் ஆற்காடு மாவட்ட

தி. மு. க. முதல் மாநாடு

★

12—3—50 ஞாயிறன்று குறிஞ்சிப்பாடியில்

"திருவள்ளுவர் பந்தலில்" நடைபெறும்

தலைவர் :- இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

துவக்குபவர்:- பூ. கணேசன் எம். ஏ.

பொதுச் செயலாளர்

தோழர் சி. என். அண்ணாத்துரை

க. அன்பழகன் எம். ஏ., சேலம். ஏ. சித்தையன், இரெ. இளம்வழுதி எம். ஏ., ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல், கண்ணதாசன்

மற்றும் பல இயக்க சொற்பொழிவாளரும் கலந்துகொள்வர்.

★

இரவு, சி. என். ஏ. குழுவினரால்

நடத்தப்பெறும்

"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்

கட்டணம் :—

நன்கொடையாளர்	... ரூ	5—0—0	(உணவுடன்)
வரவேற்பாளர்	...	"	(உணவுடன்)
சார்பாளர்	... ரூ	2—0—0	(உணவுடன்)
பெண் சார்பாளர்	... ரூ	1—0—0	(உணவுடன்)
சார்பாளர்	... ரூ.	1—0—0	(உணவின்றி)
பார்வையாளர்	... ரூ	0—8—0	(உணவின்றி)

பெண்களுக்குப் பார்வைக் கட்டணம் கிடையாது

குறிப்பு :—குறிஞ்சிப்பாடி, கடலூர்—விருத்தாசலம் இரயில் மார்க்கத்தில் உள்ளது.

வரவேற்புக் குழுவினர்,

தெ. ஆ. மா. தி. மு. கழக மாநாடு, குறிஞ்சிப்பாடி.

தமிழ், வட மாவட்டங்களின் சித்த வைத்திய முதல் மாநாடு

திருவின்னைப்பூர் (சென்னை) தாசர்புரம் சித்த ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் ஷை மாநாடு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது 1950-ம் ஆண்டு மார்ச்சு 25-ம் தேதி சனிக்கிழமை காலை 9-30-மணிக்கு மாநாடு துவக்கப்படும். சித்த வைத்தியர்களும் தமிழன்பர்களும் ஆர்வத்தோடு ஷை விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. இந்த மாநாட்டில் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்வோர் ரூபாய் ஒன்று கட்டணம் செலுத்தவேண்டும். பிரதிநிதிகளுக்குப் பேச்சுரிமையும், ஓட்டு உரிமையும் உண்டு. வெளியூர் பிரதிநிதிகளுக்குப் பகல் உணவும், மாலையில் தேநீரும் அளிக்கப்படும்.

2. ஷை மாநாட்டின் வரவேற்புக்குழு அங்கத்தினராக, ஆக விரும்புவோர் ரூ. 5 கட்டணம் செலுத்தவேண்டும். சுல அன்பர்கள் இவ்வரவேற்புக்குழுவில் சேர்ந்து ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறோம்.

3. சென்னை, நெல்லூர், செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சித்தூர், முதலிய மாவட்டங்களிலுள்ள சித்த வைத்தியர்களும், மற்றத் தமிழ் மாவட்டங்களிலுள்ள சித்த வைத்தியர்களும், சித்த சங்கங்களும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி மாநாட்டைச் சிறப்பிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

4. ஷை மாநாட்டிற்குத் தீர்மானங்களை அனுப்ப விரும்புவோர் மார்ச்சு 20-ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

5. இம்மாநாட்டின் இதர விளக்கம் அடுத்த வெளியீட்டின் மூலம் தெரிவிக்கப்படும்.

6. மாநாட்டில் சித்தவைத்திய புத்தகாலயம் ஒன்று திறக்கப்படும். சித்த வைத்தியர்களும், சங்கங்களும் தங்கள் பிரசுரங்களை அனுப்பிக்கொடுக்கவும், என ஷை இவ்வூர் சித்த வைத்தியக் கழகத்தலைவர் தோழர் சே. தேவதாஸ், அறிவிக்கிறார்.

லியோபால்டு பெல்ஜிய மன்னராக வாக்கெடுப்பு

பிரஸ்ஸல்ஸ், மார்ச். 5—

பெல்ஜிய மன்னராக லியோபால்டு மன்னர் திரும்பி வரவேண்டுமா, வேண்டாமா என்பதற்காகப் பொதுஜன வாக்கெடுப்பு மார்ச் 12-ந் தேதி நடைபெறவிருக்கிறது. 55 % க்குக் குறைவாகத்தான் திரும்பி வருவதற்கு வோட் கிடைத்தால், தான் முடிதுறந்து விடுவதாக லியோபால்டு ஒப்புக்கொண்டிருக்கிறார்.

எதிர்ப்பாளர்களின் காரியாலயத்தில் சுமார் 40 ஆதரவாளர்கள் புகுந்து தாக்கப்பட்டதாகவும், கதவை வீசி ஜன்னல்களை உடைத்ததாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. இந்த அடிதடி காரணமாக சுமார் 40 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

நாட்டு நடப்பு

இலயோலாக் கல்லூரித் தமிழ் மன்ற இறுதி விழா

சென்னை, மார்ச். 1—

இலயோலாக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் ஆண்டு இறுதி விழா 1—3—50 புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றது. கல்லூரித் தலைவர் அதிசயம் அவர்கள் தலைமையில், அறிஞர் கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி. அவர்கள் "இன்றையத் தமிழ் இலக்கியம்" எனும் பொருள்பற்றி அரிய கருத்துக்களடங்கிய விரிவுரையாற்றினார். தோழர் க. பழனிவேலு வரவேற்க தோழர் சி. ஜெனார்த்தனன் ஆண்டறிக்கை படித்தார். அண்ணுவுக்கு கல்லூரி அனுமதி அளிக்கவில்லை என்பதனைக் குறிப்பிட்டார். அப்பாத்துரை அவர்களது விரிவுரைக்குப் பின், அவரது கருத்துக்களை அதிசயம் ஆசிரியர் பின்னர், செயலாளர்களான, ஜெனார்த்தனன், பழனிவேலு இருவரும் நன்றி கூறலை நிகழ்த்தினர். வாழிய செந்தமிழ் கீதத்துடன் இறுதி விழா இனிது முடிந்தது.

செந்நாப்போதார் செந்தமிழ்ச் சங்க ஆண்டு விழா

மதுரை, மார்ச். 1—

மதுரை சௌராட்டிர உயர்நிலைப்பள்ளிப் சேவை மன்றத்தில் செந்நாப்போதார் செந்தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா 28—2—50 அன்று வெகு விமரிசையாக நடந்தேறியது.

மாணவத் தோழ ரொருவர் தமிழ் வாழ்த்துப் பண்பாடினார். இப்பள்ளியின், "பள்ளியாளு மன்றத் தலைவர்" சுப்புராமன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். மாணவத் தோழர் சுப்பிரமணியம் ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவிற்கு ம. சி. பி. எம். தமிழாசிரியர், தோழியர் லில்லியைநாவல் பி. ஏ., அவர்கள் தலைமை தாங்கி அழகியமுறையிலே தலைமையுரையாற்றினார். அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தோழர் இராம. மீனாட்சிசுந்தரனார் எம். ஏ., அவர்கள் "வள்ளுவன் புரட்சி" எனும் பொருள்பற்றி சிறந்ததொரு சொற்பொழிவாற்றினார்.

இச்சங்கத்தின் பேச்சுப் போட்டியிலும், கட்டுரைப் போட்டியிலும் வெற்றிபெற்ற மாணவர்கட்கு பள்ளித் தலைமையாசிரியர் தோழர் எஸ். கே. குப்புசாமி பி. ஏ. எல். டி., பரிசு வழங்கினர்.

கடைசியாக, பள்ளி மாணத் தலைவர் க. குருவையா நன்றிகூற, எல்லோரும் அறிவு விருந்துண்டு அகமகிழ்வெய்திச் சென்றனர்.

அர்ச்சுனன் நினைவு மன்றம்

நாகர்கோவில், பிப். 27—

இன்று காலை 11-15 மணிக்கு தோழர் எஸ். பாவலூகலம் தலைமையில் வடசேரி மேற்படி மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் நடந்தது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் தந்தையும், திராவிட நாட்டின் வைத்திய வள்ளலும், சித்த வைத்திய நிபுணருமான பெருந்தகை தோழர் ஈ. வெ கிருஷ்ணசாமி அவர்களின் பிரிவுக்கு மன்றம், அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

பிப்ரவரி 11 ல் சேலம் சிறையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக 22 தொழிலாளத் தோழர்கள் உயிர் துறக்கவும், 100 தோழர்கள் காயமடையவும் நேர்ந்த சம்பவத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், நியாய விசாரணை நடத்தும்படியும் சென்னை சர்க்காரை எச்சரிக்கை செய்கிறது.

வள்ளுவர் வாலிபர் கழகம்

பெங்களூர், பிப். 28—

வள்ளுவர் வாலிபர் கழகம் சொற்பயிற்சிக் கூட்டம் இரண்டாவதாக 'சினிமா அவசியமா?' என்ற தலைப்பில் 26-2-50 அன்று மாலை 4-30 மணிக்கு தண்மொசாகர் திருவள்ளுவர் சங்கத்தின் துணைச்செயலாளர் ஆ. கோபாலன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. அது சமயம் பல அன்பர்கள் சொற்பயிற்சியில் பங்குகொண்டார்கள்.

கடைசியாக பெங்களூர் பிட்டி அலுவலகம் கௌரவ செயலாளர் தோழர் தி. ரா. தர்மராசன் அவர்கள் நல்லதோர் விரிவுரையாற்றினர். முடிவில் கழகச் செயலர் செ. முனிரத்தினம் அவர்களால் கீழ்க்காணும் இரண்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

(1) வங்கத்தின் வீரன், சரத்பாபு அவர்களின் பிரிவிற்காக, இக்கூட்டம் வருந்துவதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கும் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(2) சேலத்தில் நடந்த, கோர சம்பவத்தை யொட்டி, இக்கூட்டம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறி, நன்றி வழங்க, கூட்டம் இனிது முடிந்தது.

முருகன் செந்தமிழ்க் கழகம்

மயிலம், பிப். 28—

26—2—50 ஞாயிறு "சிவத் திருவிஞான மாலை அடிகளார்" சிறிய தலைமையில் தோழர் பு. ர சாமிநாத முதலியார் எம். ஏ. எல். டி. அவர்கள் "வரலாற்றுக்கூடிய இலக்கியம்" என்னும் பொருள் பற்றியும், தோழர் க. இராஜேசுவரி அம்மையார் "சமயமும் பெண்களும்" என்னும் பொருள்பற்றியும் பேசினார்கள். பின் இராமநாத சுவாமிகள் பேசினார்கள். மாணவர்களுக்குப் பரிசுகள்வழங்கப்பட்டன. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரையோடு கூட்டம் இனிதே முடிவடைந்தது.

அமெரிக்காவில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள்

அணுக்குண்டு வீச்சிலிருந்து பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் முறை உட்பட போர்க்கால தற்காப்பு முறைகளை இன்றையதினம் கூடிய ரகசிய கூட்டத்தில் அமெரிக்க சர்க்கார் வகுத்திருக்கிறார்கள்.

ஏதேனும் உண்மையான ஆபத்தை முன்னிட்டுதான் இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு செனட்டார் தோழர் டைடிங்ஸ் அப்படியொன்றுமில்லை. சாதாரணமாகப் பொதுமக்கள் எப்படி "தீ இன்ஷூரன்ஸ்" திட்டத்தில் சேர்ந்து கொள்ளுகிறார்களோ அது போலவேதான் இந்தத் திட்டமும்" என்றார்.

தெ. ஆ. இந்தியர் பள்ளிக்கூடங்கள்

ஜோஹன்ஸ்பர்க், மார்ச். 5—

தென்னாப்பிரிக்காவில் ஜெர்மிஸ்டன் என்ற இடத்தில் இந்தியர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களைத் தாமே ஆரம்பித்து நடத்துகிறார்கள்.

இதை ஈஸ்ட்ராண்ட் ஸ்கூல் போர்டு மெம்பரான மார்ட்டின் மிகவும் பாராட்டிப் பேசுகையில், இந்தியர்கள் எவ்வளவோ தொல்லைகளை அனுபவித்த போதிலும் தங்கள் பொறுப்பையும், கடமையும் உணர்ந்து நடந்துகொள்வது பாராட்டப்பட வேண்டியதே என்று கூறினார்.

இந்தப் பள்ளிக்கூடத்தின் கட்டிட செலவு மட்டுமே ரூ. 91,000 பிடித்திருக்கிறது.

புயலுக்கு அச்சாரம்...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயன் தருகின்றனவா என்பது தான் நமது கேள்வி

அங்ஙனமே தான் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறையும் ஏட்டுச் சுரக்காயாக இருந்து வருகிறது—இல்லை ஏட்டுச் சுரக்காயாக ஆக்கிவிட்டனர் அரசியலார். இந்த நிலையிலேதான் அந்தச் சட்டத்தைக் கண்டு சீறி விழுகிறார் தோழர் சரந்த். "ஆ! அப்படியொரு சட்டம் இன்னமும் இருப்பதா?" என்று மார் தட்டிக்கேட்கிறார்.

அது சட்ட விரோதம் என்று கூறுவதன் மூலம் சர்க்காரைப் பயமுறுத்துகிறார். இந்தப்பிரச்னையை நீதிமன்றத்துக்குக்கொண்டுபோக தாம் விரும்பவில்லை என்று சொல்லுவதன் மூலம், இப்பிரச்னை நீதிமன்றம்வரை போகவேண்டிய பிரச்னை என்பதைஜாடையாகச் சுட்டிக்காட்டுகிறார்—இல்லை, குறும்புத்தனம் செய்கிறார்!

வகுப்புவாரி பிரதிநிதித்வமுறை, திராவிட மக்களின் உயிர்நாடி. அந்த நாடியின் நடுவே ஓடுவது தன்மான ரத்தம், இந்த சட்டத்தால் பலன் விளைகிறதா, இல்லையா என்பதுகூட அல்ல இன்றைய திராவிடப் பெருங்குடி மக்களின் பிரச்னை. திராவிடர் நலங்கருதி நீதிக் கட்சியால் நிலைநாட்டப்பட்ட ஒரு சட்டம் என்ற அளவிலே, அதனைத்தமது உயிரினும் மேலாக மதித்துப் போற்றி வருகின்றனர் இம்மாநில மக்கள்.

அப்படிப்பட்ட சட்டத்தில் எக்காரணங்கொண்டும் கை வைப்பது மனக்கசப்பை வளரச் செய்யும்—வம்பை விலைக்கு வாங்குவது போலாகும்—ஆபத்தானது—புயலுக்கு அச்சாரம் போடுவதுபோலாகும்—தூங்குகின்ற சிங்கத்தைத் தட்டி எழுப்புவதுபோலாகும். இதனை நம்மைவிட ஆட்சியாளரே நன்கு அறிந்திருக்கின்றனர். அறிந்திருக்கின்ற காரணத்தால்தான், அதிலே கை வைக்காமலேயே அதனை உயிரற்றதாகச் செய்யும் உபாயங்களைக் கையாளுகின்றனர்.

இங்ஙனம் ஆட்சியாளர் தொட்டுப்பார்க்கப் பயப்படும் ஒரு பிரச்னையோடுதான், தோழர்சரந்த் விளையாடுகிறார்—விஷப்பரீக்ஷை செய்ய விழைகிறார். இந்திபக் குயரகத் சட்டம் என்ற திரைமறைவிலே இருந்துகொண்டு

அம்பு எய்து பார்க்கிறார்—போதாக்குறைக்கு நீதிமன்றத்தின் துணையையும் நாடுகிறார்; நாடட்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை என்னும் பாறை மீது தோழர் சரந்த் மட்டுமல்ல, இன்னும் யார் வேண்டுமானாலும் மோதிக்கொள்ளட்டும். எது வேண்டுமானாலும்பேசட்டும்—எழுதட்டும்—நீதிமன்றங்கள், சட்டங்கள் இவற்றின் துணையையும் நாடிப்பார்க்கட்டும் ஆனல் காணப்போகும் பலன் ஒன்றுமிராது என்பது திண்ணம். அப்படி அவர்கள் ஏதேனும் பலன் காண்பதாக வைத்துக் கொண்டால், அன்றே திராவிட மக்களின் விடுதலைப் போருக்குவித்தூன்றியவர்களாவர்.

அச்சகம்
சென்னையில் ஒரு அச்சகம் விற்பனைக்குஉள்ளது. ஜாப், பத்திரிகை, புத்தக வேலைகளுக்கு ஏற்றது.
C/o மாலை மணி சென்னை-1.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1